2010 நவம்பர் 10]

(ஈ) கடலூர், பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் கிராமம், இடிதாக்கி இறந்த மூன்று சிறுவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கடலூர் மாவட்டம், என்னுடைய பண்ருட்டி தொகுதியில் உள்ளடங்கிய வீரப்பெருமாநல்லூர் என்னும் கிராமத்தில் இடி தாக்கியதில் மூன்று சிறுவர்கள், பள்ளிக் குழந்தைகள் வீரமணி—வயது 15, சதீஷ்—வயது 10, முத்துராஜ்—வயது 15 ஆகியோர் அகால மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்தச் செய்தி நேற்றையதினம் அவையில் இருக்கின்றபோதே வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை இந்த அவையின்மூலமாக ஈர்த்து, என்னுடைய பண்ருட்டி தொகுதி வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் இடிதாக்கி உயிரை நீத்த அந்தப் பள்ளிச் சிறுவர்கள், மூன்று குழந்தைகளின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நல்லதொரு நிதியினை வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிடவேண்டும் என்று இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(உ) பன்னாட்டுத் தொழில் நிறுவனத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைக்க அனுமதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களில் தொழிற்சங்கங்களை அங்கீகரிக்கக்கூடிய வகையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்கான ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை தங்களிடம் வழங்கியிருக்கின்றோம். அதுகுறித்துப் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அது பரிசீலனையில் இருக்கிறது. **

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் ஓர் உறுப்பினர் மீது மற்றோர் உறுப்பினர் குற்றச்சாட்டைச் சுமத்துவது என்றால், முதலில் பேரவைத் தலைவரிடத்திலே தெரிவிக்க வேண்டும். எந்த உறுப்பினர்மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறதோ, அந்த உறுப்பினருக்கு முதலிலே தெரிவிக்கப்பட்டு, பிறகுதான் அவர் பதில் சொல்ல வேண்டும். திடீரென்று இந்தச் சபையிலே எழுந்து ஓர் அமைச்சர் மீதோ அல்லது ஓர் உறுப்பினர் மீதோ ஒரு குற்றச்சாட்டு சுமத்தினால் திடீரென்று பதில் சொல்ல முடியாது. காரணம் என்னவென்று சொல்கிறேன். முதலில் யார் மீது குற்றஞ்சாட்டுவதாக இருந்தாலும் அவர்களுக்கு inform பண்ண வேண்டும். "உங்கள் மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்துகிறோம், நீங்கள் இதற்குப் பதிலளிக்கத் தயாராக இருக்கிறீர்களா" என்று கேட்க வேண்டும். அதற்குப் பிறகுதான் நீங்கள் அனுமதிக்க வேண்டுமே தவிர, திடீரென்று இப்படிச் செய்வது நியாயமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், இதைத்தான் நான் நேற்று சொன்னேன். நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பதை என்னிடம் முதலில் சொல்லிவிட்டு, என்னுடைய அனுமதியைப் பெற்றுவிட்டுத்தான் பேச வேண்டும் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.